DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 11

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சதீஷ் |
| Father's Name | : | S. Moorthy |
| Village | : | Vadiveeswaram |
| Taluk | : | Agasteeswaram |
| Caste | : | Nadar |
| Calling | : | Police |
| Religion | : | Hindu |
| Age | : | 37 |
| Date | : | 13.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

13.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது வடசேரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் முதல் நிலை காவலராக வடசேரி காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். 28.08.2023 ஆம் தேதி இரவு 10.40 மணிக்கு வடசேரி பேருந்து நிலையத்தில் அலுவலில் இருந்தேன். அப்போது காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்து வரசொன்னார்கள். நான் போனேன். குற்ற எண்.120/2023 தொடர்பான ஒரு துரித தபாலை என்னிடம் SSI ஜெயராஜன் கொடுத்து நாகர்கோவில் குற்றவியல் நடுவர்

எண் 2 ல் ஒப்படைக்க சொன்னார். இரவு 10.45 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து கிளம்பி நீதிமன்றத்திற்கு வந்து பார்த்தபோது நீதிமன்றத்தில் அலுவலர்கள்தான் இருந்தார்கள். நீதித்துறை நடுவர் எண். கேம்ப் ஆபிஸ் மூவேந்தர் நகரில் உள்ளது என கூறி அங்கே போய் கொடுக்க சொன்னார்கள். நீதிமன்றத்திலிருந்து கிளம்பி அங்கு சென்றபோது இரவு 11.20 மணி இருக்கும். வீட்டில் லைட் ஆப் செய்து உள் பக்கமாக பூட்டப்பட்டிருந்தது. ராத்திரி சொந்தரவு செய்ய கூடாது என கிளம்பி வந்து காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், துணை கண்காணிப்பாளர் அலுவலகம், ஆவண குற்ற காப்பகம் ஆகியவற்றில் அதன் நகல்களை ஒப்படைத்தேன். மறுநாள் காலை நீதிமன்ற அலுவல் நேரத்தில் காலை 10.15 மணிக்கு நீதிமன்றம் வந்து ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

வடசேரி காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றம் சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். 10 நிமிடத்தில் காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றம் வந்து விடலாம் என்றால் சரிதான். நான் அன்றைய இரவு பார்த்ததாக சொல்லும் நீதிமன்ற ஊழியரின் பெயர் என்னவென்றால் அது எனக்கு தெரியாது. நீதித்துறை நடுவரின் பணி நேரம் 24 மணி நேரம் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது நீதித்துறை நடுவரின் வீடு உள்பக்கமா பூட்டப்பட்டிருந்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். நான் ஆய்வாளரிடம் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கொடுத்ததாக சொல்லும் முதல் தகவல் அறிக்கை முன் தேதியிட்டு பிற்பாடு தயார் செய்யப்பட்டது என்பதால்ங தான் அந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக சொல்லும் நேரத்திலிருந்து சுமார் 18 மணி நேரம் தாமதமாக நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாக சொல்லும் முதல் தகவல் அறிக்கை மதியம் 12.30 மணிக்கு பெற்றதாக

நீதிபதி கையொப்பம் இட்டு உள்ளார் என்றால் சரிதான். அவர் கையில் கிடைக்கும்போது அந்த நேரம் ஆகியிருக்கலாம். நான் முதல் விசாரணையில் சொன்னவாறு 29.08.2023 அன்று காலை 10.15 மணியளவில் நீதிமன்றத்தில் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கால தாமதத்திற்கான நான் சொல்லும் காரணம் ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில், சொன்னநேரத்தில் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அறிக்கிறேன் என்றாலும் சரியல்ல.